# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 78 — 1973 සැප්තැම්බර් 21 වැනි සිකුරාදා — 1973.09.21

78 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 991 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 998 | ஏலவிற்பனைகள் .. .. .. | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


*கவனிக்க.*—தேசிய கடவுடக் கூடம் சட்டமூலமும், நிதிச்சட்டமூலமும் தேசிய நீர்வழங்கல் வடிகால் சேவைகள் சபைச் சட்டமூலமும், இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகம் (திருத்தம்) சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின்பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### கேள்விப்பத்திர அறிவித்தல்

இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு-5, கிருல வீதி 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர், 1973.10.18 ஆந் தேதி மு. ப. 10.00 மணிவரை, பின்வரும் வேலைகளுக்கான வேறுன பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொள்ளுவார்.

| விவரணம் | ஒப்பந்தகாரர்களின் ஆகக் குறைந்த பதிவுப் பெறுமதித் தொகை |
|---|---|
| 1. மாத்தறைச் சாலை—கட்டடங்கள், வீதிகள், காலைகள் அமைத்தல்—ஈசி/502 | ரூபா 2,25,000.00 |
| 2. அளுத்கமைச் சாலை—கட்டடங்கள், வீதிகள், காலைகள் அமைத்தல்—ஈசி/555 | ரூபா 50,000.00 |
| 3. ஹாகமைச் சாலை—கலத்தானத்திடும் (டொக்கிங்) நிலைய வேலை இடமண் வேலை—ஈசி/559 | ரூபா 2,00,000.00 |
| 4. மதவாச்சி வேலையிடம், மண் வேலை—ஈசி/547 | ரூபா 50,000.00 |

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்பட வேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக்கொள்வதுடன் இவரின் அலுவலகத்தில் பட வரைவுகளையும் பரிசீலனை செய்யலாம். ஒவ்வொரு வேலைக்கும் எதிராக காட்டப்பட்ட தொகைக்காக இ. போ. ச. வில், அரசாங்க திணைக்களங்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தேவையான கேள்விப் பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக 1 ஆம், 3 ஆம் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 200/- க்கும், 2 ஆம், 4 ஆம் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/- க்குமான மீளளிக்கப்படக் கூடிய கேள்விப்பத்திரக் கட்டுப்பணப் பற்றுச் சீட்டையும், 1 ஆம், 3 ஆம் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 40/- க்கும், 2 ஆம், 4 ஆம் விடயங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 25/- க்குமான மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணப் பற்றுச்சீட்டையும் 1973.10.17 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன் பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களது சான்றுரைகளைப் பரிசோதனைக்குக் காட்ட வேண்டும். அவ்வித சான்றுரைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே கேள்விப் பத்திரக் கட்டுப்பணத்தை காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு-5.

9-557—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

1973/1974 ஆம் ஆண்டிற்கு உண்ணுட்டு ஏற்றியிறக்கல் சேவையை வழங்கிக் கொள்வதற்குப் பொறியிட்ட கேள்விகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும். ஆகக் குறைந்தது பத்து உலொறிகளையாவது சொந்தமாக வைத்திருக்கும் இயக்குநர்கள் மட்டும் கேள்விக்குத் தகவுடையவர்களாவர்.

கேள்வி நிபந்தனைகளையும் பட்டோலையையும், மீளளிக்கப்படும் காசுவைப்பாக ரூபா [illegible]/- கொடுத்தும், கேள்வியாளர்கள் சொந்தமாக வைத்திருக்கும் வாகனங்களின் நிகழாண்டிற்குரிய அரசிறை உத்தரவுச் சீட்டுக்களையும் பதிவுச் சான்றிதழ்களையும் காண்பித்தும், அத்துடன் கூடுதலாகக் கேள்வுக்கு அமர்த்திக் கொள்ள எதிர்பார்க்கும் 15 உலொறிகளின் சொந்தக்காரர்களின் பெயர்களையும் விலாசங்களையும் அவ்வாகனங்களின் பதிவிலக்கங்களையும் கொடுத்தும், கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் 1973 செப்ரம்பர் 28 ஆந் தேதி காலை 10.00 மணியுடன் முடிவடையும்.

பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு 3.

9-559 —21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78.

---

### சிறைச்சாலைத் திணைக்களம்

**பொரளை, வெலிக்கடைச் சிறைச்சாலையில் 60 அடி உயரமான 20,000 கலன் தண்ணீர் கொள்ளக்கூடிய கோபுரத் தண்ணீர்த் தொட்டி நிர்மாணித்தல்**

மேற்படி வேலை செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கொழும்பு பேஸ்லைன் வீதியிலுள்ள சிறைச்சாலைத் தலைமை காரியாலயத்தில், ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. நீர் வேலைப்பகுதி, கட்டிட நிர்மாணப் பகுதி, அல்லது வேறு எந்த அரசாங்கத் திணைக்களத்துடனுவது ரூபா 3,00,000/- வரை பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் மட்டும் எழுத்து மூலம் தாங்கள் நிர்மாணப் பொறியியல் பகுதியுடன் செய்த ஒப்பந்த விபரத்தை அணைத்தால் மனுப்பண்ண அருகதை உடையவர்கள் ஆவர்.

3. கொழும்பு 9, பேஸ்லைன் வீதியிலுள்ள சிறைச்சாலை தலைமைக் காரியாலயத்தில், ஆணையாளர் (பொது வேலைப் பகுதி) இடமிருந்து பெறப்படும் பிரதி விண்ணப்பங்களில் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க வேண்டும். இத்தலைமை அலுவலகத்தில் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 150/- கட்டப்பட்டு அப்பற்றுச் சீட்டை தலைமைக் காரியாலய சிறைச்சாலை அதிகாரிக்கு சமர்ப்பித்தால் 1973 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 4 ம் தேதி நண்பகல் 12 மணி வரை அவரால் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். திரும்பப் பெற முடியாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 15/- கொடுக்கப்பட வேண்டும். காசோலைகள், காசுக் கட்டளைகள், தபால் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

மேலே குறிப்பிடப்பட்ட பெறுமதியுள்ள அரசாங்க ஒப்பந்த வேலையை பொறுப்பெடுப்பதற்கான எழுத்து மூலமான சான்று பகரக்கூடிய ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப் பத்திரத்திற்குத் தகுதியுடையவராவர்.

4. கேள்விப் பத்திரங்கள் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலய அதிகாரியின் அறையிலுள்ள கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் போடுதல் வேண்டும். அல்லது 1 ம் பந்தியில் கூறப்பட்டபடி கேள்விச்சபைத் தலைவருக்குக் கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபால் மூலம் இடதுபக்க மூலையில் "20,000 கலன் நீர் கொள்ளக் கூடிய கோபுரத் தொட்டி நிர்மாணித்தல்" என எழுதப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். நேரத்துக்கும் திகதிக்கும் பிந்திக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

5. 1973 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8 ம் தேதி பி. ப. 1.30 மணிக்கு சிறைச்சாலை தலைமைக் காரியாலய அதிகாரியால் விண்ணப்பங்கள் திறந்து பார்வையிடப்படும். விண்ணப்பம் திறக்கப்படும்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதிகளோ சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார்கள்.

6. காரணம் காட்டாமல் கேள்விப் பத்திரத்தை ஏற்றுக் கொள்ளவும் நிராகரிக்கவும் கேள்விச் சபைக்குப் பூரண அதிகாரமுண்டு.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர் தமது கேள்விப் பத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டவுடன் கேள்விக்குரிய தொகை ரூபாவின் நூற்றுக்கு 5 வீதத் தொகையை பாதுகாப்புப் பணமாகக் கட்ட வேண்டும். அத்துடன் ஏழு நாட்களுள் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப் பத்திரகாரருக்கு அவர் கொடுத்த விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ தெரிந்தெடுக்கப்பட்டதை கடிதமூலம் அறிவித்தால் கேள்விப்பத்திரகாரர் ஏற்றுக் கொண்டார் என்று கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றி கடிதம் பெற்ற ஒருவர் ஒப்பந்தம் எழுதத் தவறுவாராயின் அவர் கட்டிய கேள்விப்பத்திர வைப்புப் பணம் அரசாங்கத்திற்கு சொந்தமாக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர் கேள்விப் பத்திரத் தொகையின் நூற்றில் 5 பங்கை கட்டியவுடன் தேர்ந்தெடுக்கப்படாதோரின் கேள்விப்பத்திர வைப்புப் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விப்பத்திரகாரர் நியமித்த வேலையை முடிப்பதற்கு இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும். அதுவும் வேலைக்கேற்றுக்கொள்ளப்பட்ட பகுதியில் சீவிப்பவரையே தேர்ந்தெடுத்தல் வேண்டும். கூலியாட்களுக்கு சம்பளம் வழங்குவதற்கென இப்பொழுது பாவிப்பில் உள்ள சட்டங்கள் பின்னும் பாவிப்பிற்கு வர இருக்கும் சட்டங்களுக்கிணங்கவே இவ்வேலையை முடிப்பதற்குத் தரமான வேதனம் வழங்கவேண்டும்.

9. மேலதிக விபரங்கள் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலய சிறைச்சாலை அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ஏ. த சில்வா,
சிறைச்சாலை ஆணையாளர்.

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9,
04.09.73.

9-481 —21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

எனது இல. : எல்.எஸ். 157

### கச்சேரி—வவுனியா

கீழ்காணும் திருத்த வேலை சம்பந்தமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15 ம் திகதி பிற்பகல் 2.00 மணி வரைக்கும் தனித்தனியே முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. மாம் வினியோகிப்பதுடன் மரத்திலான அறைகள் பிரித்தமைத்தல்—ஒட்டுசுட்டான் திட்ட அலுவலகம்.
2. ஒட்டுசுட்டான் திட்ட அலுவலக வளவு—வேலி திருத்த வேலை.
3. முத்தையன் கட்டு குடியேற்றத் திட்டத்தின் காணி அதிகாரியின் விடுதி திருத்த வேலை.
4. முத்தையன் கட்டு குடியேற்றத் திட்டத்தின் இலிகிதர் விடுதி திருத்த வேலை.

2. வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் (காணிக்கிளை) பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்கள் (இரு பிரதிகள்) நிரப்பி அனுப்புதல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமாக மேலதிக விபரங்களை வவுனியா அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 08 ம் திகதி பிற்பகல் 2.00 மணி வரையும் வழங்கப்படும்.

4. அரசாங்க அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், கிராம முன்னேற்ற சங்கங்களும், பயிர்ச் செய்கைக் குழுக்களும் ஆகிய அனுமதிக்கப்பட்ட சங்கங்களும் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர். வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் இக் கச்சேரியின் ரூபா 25 (ஒவ்வொரு வேலைகளுக்கும்) கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டு காட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். கிராம முன்னேற்றச் சங்கங்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கட்டுப்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

அ. ம. ம. குலநாயகம்,
மாவட்ட காணி உத்தியோகத்தர்,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

வவுனியாக் கச்சேரி,
1973.09.05.

9-537 —21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

## சௌக்கியத் திணைக்களம்

### பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவையும்.**—1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ந் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ந் திகதி 1974 (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையின் **1** ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் நிலையங்களுக்குப் பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்குரியதும் முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம், ஏற்றுக்கொள்வார்.

2. **(க) கேள்விக் கட்டுப்பணம்.**—கீழ்க்காணும் அட்டவணையின் இரண்டாம் பந்தியில் குறிக்கப்படும் வைப்புப் பணத்தைக் கொழும்பு தவிர்ந்த ஏனைய எந்தவொரு கச்சேரியிலோ அல்லது கொழும்பு, பிறிஸ்டல் வீதியில் இருக்கும் இலங்கை வங்கியிலோ எனது பெயரில் கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

அனுமதிபெற்ற கிராம முன்னேற்றச் சங்கங்கள் அல்லாவிட்டால் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள் கேள்விப பத்திரங்களுக்கு விண்ணப்பங்கள் செய்யலாம். மேற் குறிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விக் கட்டுப்பணம் கட்டவேண்டிய அவசியமில்லை. இச்சங்கங்கள் தங்கள் பதிவு இலக்கத்தை, கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்போது எழுதி அனுப்ப வேண்டும்.

3. **பெறுமதி விபரங்கள்.**—கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பம் செய்யுமுன் கேள்விகள் முடிவடையும் திகதிக்கு முன்னர் தங்களுடைய பெறுமதி விபரங்களை எனக்கோ அல்லது அவர்கள் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள விரும்பும் சௌக்கிய சேவை அத்தியட்சகர்களுக்கோ தெரிவித்தல் வேண்டும்.

மேலே இரண்டாம் பந்தியில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு காரியாலயத்திலும் இதற்கான பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தகுதி விபரங்களையோ அல்லது நிதிநிலை நிரூபணத்தையோ அளிக்கத் தவறினால் கேள்விக் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

4. **தொகைகள்.**—கீழ்க்காணும் அட்டவணையில் 5 ம் பந்தியில் உத்தேச விநியோகத் தொகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

5. **கேள்விகள் அனுப்பவேண்டிய முறை.**—எல்லாக் கேள்விகளையும் இணைப்படிகளுடன் சௌக்கிய சேவை அத்தியட்சகர், புத்தளம் என்று முகவரியிடப்பட்ட உறைகளில் வைத்து அனுப்பப்பட வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்டுள்ள கேள்விகளைக் கொண்டுள்ள உறையின் இடது பக்கத்து மேல் மூலையில் சேவையின் தன்மையும் இடது பக்கத்து கீழ் மூலையில் அனுப்புபவரின் பெயரும் முகவரியும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கொண்டுள்ள உறைகளைப் பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது அவைகளை இந்தக் காரியாலயத்தில இருக்கும் கேள்விப் பெட்டிக்குள் போடலாம் அல்லது ஒப்பந்த விநியோகக் கணக்காளரிடம் கொடுத்தால், அவர் அக்கேள்வியை ஒப்புக்கொண்டதற்கு ஒரு பற்றுச்சீட்டுத் தருவார்.

6. **கேள்விகள் மூடப்படுதல்.**—கீழ் அட்டவணையின் நாலாவது பந்தியில் கூறப்பட்டிருக்கும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு இந்தக் காரியாலயத்தில் கேள்விகள் மூடப்பெற்று உடனடியாகத் திறக்கப்படும்.

7. **கேள்விகள் திறக்கப்படுதல்.**—கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் சமுகமாயிருக்கலாம். சமுகமாயிருக்கும் கேள்விக்காரர்களுக்குக் கேள்விக்காரர்களின் பெயர்களும் தொகைகளும் வாசித்துக் காண்பிக்கப்படும். ஒரு கேள்வியை நுனித்தாய விரும்பும் எந்த ஒரு கேள்விக்காரரும் என்னுடனே அல்லது எனது அதிகாரம் பெற்ற பிரதிநிதியுடனே ஒழுங்குகள் செய்த பின்னர்தான் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்த ஒரு கேள்வியின் இணைப்படியையும் நுனித்தாய அனுமதிக்கப்படுவார்.

8. **கேள்விகள்பற்றித் தீர்மானித்தல்.**—கேள்விப்படிவங்களில் உள்ள சாப்பாடு " பீ " அட்டவணையிற் கொடுக்கப்பட்டிருக்கும் விடயங்களுக்குக் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி உண்டாகும் சேவையின் முழுச் செலவுத் தொகையை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்ட கேள்விகள் தீர்மானிக்கப்படும்.

இருந்தும் கேள்விக்காரர்கள் கேள்விப்பத்திரத்தின் அட்டவணை " சீ " யில் உள்ள மேலதிகமான உணவுப் பொருட்களுக்கும் வீதங்களைக் குறிப்பிட வேண்டும். ஆனால் கேள்வியில் குறிக்கப்பட்டிருக்கும் வீதப்படி அல்லது சந்தை வீதப்படி இவைகளில் எது குறைந்ததோ அந்த வீதப்படியும் விலை கட்டுப்படுத்தப்பட்டிருந்தால் அந்த விலைப்படியே பணம் கொடுக்கப்படும்.

9. **கேள்விக்கு விடப்பட்ட வீதங்கள் செல்லுபடி.**—கேள்விக்காரர்களால் குறிக்கப்பட்ட வீதங்கள் 1 ம் பந்தியில் சொல்லியிருப்பதுபோல் ஒப்பந்தம் செய்யப்பட்ட காலம் வரைக்கும் செல்லுபடியாகும். ஒப்பந்தத்தில் பிரத்தியேகமாக அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி, எச்சூழ்நிலையையும் முன்னிட்டு குறிக்கப்பட்ட காலம் வரைக்கும் வீதங்களை மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது.

10. **பிணை வைப்புப்பணங்கள்.**—இங்கு தரப்பட்டிருக்கும் அட்டவணையின் 3 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் தேவையான பிணைப பணத்தைக் கட்டிய பின்பே தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும்.

11. **களஞ்சியத்திடுகை இடவசதி.**—தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்கு தாபனத்திலோ அடுத்துள்ள இடங்களிலோ களஞ்சிய அறை போன்ற வசதிகள் கொடுக்கப்படமாட்டா.

12. **கேள்வி நிபந்தனைகள்.**—நியமிக்கப்பட்ட கேள்விக்காரர்கள் கேள்விப்படிவங்களின் பின்புறத்தில் இருக்கும் கேள்வி நிபந்தனைகளைப் படித்து, அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் தேவைகளுக்கிணங்க நடக்க வேண்டும். கேள்விப்படிவத்திலுள்ள உடன்படிக்கை நிபந்தனைகளையும் கேள்விக்காரர்கள் கவனிக்க வேண்டும்.

13. **(i)** கேள்விக்காரர்கள் குறிக்கப்படும் வீதங்கள் ஒரு முழு உணவுச் சாப்பாட்டிற்கு 3½ அவுன்ஸ் அரிசி அளவு வீதம் இரு சாப்பாடுகள் ஒரு நோயாளிக்கு விநியோகிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**(ii)** உணவு அட்டவணையில் அரிசியின் அளவு இப்பொழுதுள்ள 9 அவுன்ஸ் அரிசி அளவிலிருந்து 7 அவுன்ஸ் அரிசி அளவாகத் திருத்தப்பட்டிருக்கின்றபடியால் சோற்றுடன் விநியோகிக்கப்படும் பாண் 1972 ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து தேவைப்படமாட்டாது.

**(iii)** உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அரிசி விநியோகிக்கப்படும். கேள்விக்காரர்கள் அந்த அரிசிக்கு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியினால் அன்றன்று விதிக்கப்படும் விலைக்கு பணம் கொடுக்க வேண்டும். நன்கொடையாகவோ இனமாகவோ அளிக்கப்பட்ட அரிசி ஒப்பந்தக்காரர்களுக்குச் சமையலுக்கு விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்படாத வீதத்தில் அந்த அரிசியின் அளவு ஒப்பந்தக்காரரின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும். விலை குறைக்கப்பட்ட அரிசி விநியோகிக்கப்பட்டால் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் ஒப்பந்தக்காரர் பணம் செலுத்த வேண்டும். அந்த அரிசிக்கான கழிவு விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் குறைக்கப்படாத அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு ஒப்பந்தக்காரர்களின் உணவுப் பணத்திலிருந்து கழிக்கப்படும்.

(iv) வேலையாட்கள் அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைக் கொடுத்தாலொழிய அவர்களுக்குப் பாண் உணவு விநியோகிக்கப்படும். அப்புத்தகங்களைக் கொடுத்தால் விநியோகிக்கப்படாத பாணின் விலை ஒப்பந்தகாரரின் பணத்திலிருந்து பின்வருமாறு அறவிடப்படும் :—

(அ) கூப்பனிலிருந்து பெறப்பட்ட அரிசி இன்றுபோன்று இனாமாகவிருந்தால் விநியோகிக்கப்படாத பாணின் முழு விலையும் கழிக்கப்படும் ;

(ஆ) அந்தக் கூப்பன்களில் விலை குறைக்கப்பட்ட வீதத்தில் கொடுக்கப்படும் அரிசிக்கு ஒப்பந்தகாரர் பணம் செலுத்தினால் விநியோகிப்படாத பாணின் விலைக்கும் விலை குறைக்கப்பட்ட அரிசியின் விலைக்கும் உள்ள வித்தியாசத்தின்படிக்கு அறவிடப்படும்.

எம். வீ. எ. பலசேகரா,
சௌக்கிய சேவை அத்தியட்சர்.

புத்தளம்,
1973 ம் ஆண் செத்தெம்பர் மீ 07 ந் உ..

### குறித்த அட்டவணை

| தாபனங்கள் | | கேள்விக் கட்டுப் பணம் ரூபா | பிணை வைப்புப் பணம ரூபா | கேள்விகள் மூடப்படும் திகதியும் நேரமும் | வேலைக்காரர்கள் மீன் | மாட்டி றைச்சி | கரு வாடு | காய் கறி | முட்டை | நோயாளிகள் மீன் | மாட்டி றைச்சி | கரு வாடு | காய் கறி | முட்டை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கல்பிட்டி வைத்தியசாலை | .. | 100 | 800 | 16.10.73 | 300 | 300 | 200 | 700 | 300 | 1,000 | 1,000 | 700 | 200 | 700 |
| கொட்டுக்கச்சி கி.வை. .. | .. | 100 | 800 | காலை 10 | 200 | 200 | 200 | 800 | 200 | 1,000 | 800 | 800 | 200 | 700 |
| நாவகத்தேகம கி. வை... | .. | 100 | 800 | மணி | 300 | 300 | 300 | 1,200 | 200 | 1,300 | 1,200 | 1,200 | 2,400 | 700 |
| உடப்பு கி. வை. .. | .. | 100 | 600 | | 300 | — | 200 | 1,000 | 200 | 1,000 | — | 800 | 2,000 | 800 |
| மாம்புரி கி. வை. .. | .. | 100 | 600 | | 150 | 150 | 100 | 800 | 100 | 400 | 400 | 400 | 900 | 300 |
| மஹகும்புக்கடவல பி. வி. | .. | 100 | 300 | | 50 | 50 | 50 | 800 | 150 | 10 | 10 | 10 | 20 | 10 |
| ஆனமடுவ வைத்தியசாலை | .. | 100 | 800 | | 450 | 450 | 450 | 1,350 | 450 | 2,500 | 2,500 | 2,500 | 7,500 | 2,500 |
| கல்முறுவ வைத்தியசாலை | .. | 100 | 800 | | 200 | 200 | 200 | 600 | 200 | 800 | 800 | 800 | 2,400 | 800 |
| டன்கொட்டுவ வைத்தியசாலை | .. | 100 | 800 | | 300 | 300 | 300 | 900 | 300 | 2,100 | 2,000 | 2,000 | 6,000 | 2,000 |
| மாதம்பே வைததியசாலை | .. | 100 | 800 | | 200 | 200 | 200 | 600 | 200 | 750 | 750 | 750 | 2,250 | 750 |
| முந்தல் வைத்தியசாலை | .. | 100 | 800 | | 250 | 250 | 250 | 750 | 250 | 1,100 | 1,100 | 1,100 | 3,300 | 1,100 |

9–524—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

### சிறைச்சாலைகளிலும் மறியற்கூடங்களிலும் நீதிமன்றங்களிலும் உள்ள மறியற்காரருக்கு 1972—73 ஆண்டில் சமைத்த உணவு விநியோகிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள்

இலங்கையரிடமிருந்து (“ இலங்கையர் ” என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசைகளாயிருப்பவராகும்), கீழ்க்காணும் பட்டோலையில் குறிப்பிடப்பட்டிருக்கும் சிறைச்சாலைகளிலும், மறியற்கூடங்களிலும், நீதிமன்றங்களிலும் மறியற்காரர்களுக்கு, 1.1.74 தொடக்கம் 31.12.74 வரையில் சமைத்த உணவு விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அந்தந்தச் சிறைச்சாலை அதிகாரிகளால் கோரப்படுகின்றன. 09.10.73 காலை 10.00 மணி வரையில் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் நேரத்திலிருந்து 5 நிமிடத்திற்குப்பின் அதாவது காலை 10.05 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரக்காரர்கள் விரும்பினால் அந்த நேரத்தில் பிரசன்னமாயிருக்கலாம்.

2. கேள்விப்பத்திரக்காரர் தாங்கள் விநியோகம் செய்ய விரும்பும் வீதத்தை இலக்கத்திலும் சொல்லிலும் குறிப்பிடல் வேண்டும். இலக்கத்திற்கும் சொல்லிற்கும் வித்தியாசம் இருப்பின், அல்லது வீதத்தை சொல்லில் குறிப்பிடத் தவறினால் அக்கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படலாம்.

3. விநியோகத்திற்கான விபரங்கள் பின்வருமாறு :—

(அ) காலை உணவு : அப்பம் அல்லது இடியப்பம் (நிறை ஆறு அவுன்சுக்குக் குறையாமல்) ஒரு அவுன்ஸ் சர்க்கரை அல்லது சம்பல் அதோடு ஒரு கோப்பை சீனிகலந்த தேனீர் ;

(ஆ) நண்பகல் அல்லது அந்திநேர உணவு : ஒரு தட்டு சமைத்த சாதம் (அரிசிப் பதத்தில் எட்டு அவுன்சுக்கு குறையாமலும்) ஒரு மாட்டு இறைச்சி கறி அல்லது புதிய மீன் கறி அல்லது கருவாட்டுக் கறியும் (இரண்டு அவுன்ஸ்) இரண்டு மரக்கறி ;

**குறிப்பு.**—(1) கட்டுப்பாட்டின் காரணத்தினாலோ அல்லது வேறு போதிய காரணத்தினாலோ குறிப்பிட்ட உணவை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியையோ விநியோகிக்க முடியாவிட்டால் அதற்குப் பதிலாக அதிகாரி கோரும் பதில் உணவை பகிரங்க சந்தை விலைக்கூடாக விநியோகித்தல் வேண்டும் ;

(2) மேலே குறித்த (அ) சம்பந்தமாக, காலை உணவை வேறு மலிவான பகுதியிலிருந்து கொள்வனவு செய்யமுடியாத தருணத்தில் மட்டுமே ஒப்பந்தக்காரரிடமிருந்து உணவு தருவிக்கப்படும்.

(3) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பக்காரருக்கு அரிசி வாங்குவதற்கு கூப்பனோ அனுமதிச்சீட்டோ வழங்கப்படமாட்டாது.

4. எல்லா கேள்விப்பத்திரங்களும் மூலமும் பிரதியுமாக இரண்டும் ஒரே உறையில் வைத்து, கீழே குறிப்பிட்ட படிவத்திலுள்ள பொருத்தமான அதிகாரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அவரிடமோ அல்லது அவருடைய பிரதிநிதியிடம் நேர்முகமாக கையளித்து அதற்கான பற்றுச்சீட்டை பெறுதல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய உறைகளின் இடதுகை மேல் பக்கத்தில் “ 1974 ம் ................................... க்கான சமைத்த உணவு விநியோகிக்க கேள்விப்பத்திரம் ” என்று குறிப்பிட்டு தகுந்த சிறைச்சாலை அதிகாரிக்கு 1 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நேரத்திற்கு முன்னதாக கிடைக்கும்படி அனுப்புதல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்கள் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பத்திரங்களிலேயே இருத்தல் வேண்டும். அப்படி இல்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. கேள்விப்பத்திரங்களில் கொடுக்கும் விதங்களை முடிவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு திறந்து வைத்திருக்க வேண்டும் என்பதை கேள்விப்பத்திரக்காரர் கவனித்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது தேய்த்தளித்தல் செய்தால் அவற்றிற்கெல்லாம் முதலெழுத்தொப்பம் இருத்தல் வேண்டும்.

9. கேள்விப்பத்திரங்களை பெறுவதற்கு கீழே குறிக்கப்பட்டுள்ள பட்டோலையின் பிரகாரம் முற்பணத்தை சம்பந்தப்பட்ட சிறைச்சாலையிலோ அல்லது சிறைச்சாலைத் தலைமைக்காரியாலயத்திலோ அல்லது கச்சேரிகளிலோ (கொழும்பு கச்சேரியைத் தவிர) கட்டி பற்றுச்சீட்டை பெற்று அதனை சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரியின் காரியாலயத்தில் காண்பித்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் எந்த கேள்விப்பத்திரக்காரரேனும், அவர்களுடைய கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதென எழுத்தில் அறிவித்த பின், 10 நாட்களுக்குள் கீழே குறிப்பிட்ட பிணைக் கட்டுப் பணத்தை கட்டத் தவறினால் அல்லது கட்ட மறுத்தால், அவர்கள் முற்பணமாகக் கட்டிய தொகையை அரசாங்கத்திற்கு இழந்து விட நேரிடுவதோடு, அரசாங்க ஒப்பந்தம் எதனுடனும் சம்பந்தமில்லாதவர்களாக கருதப்பட்டு, தவறிய ஒப்பந்தக்காரர் என்று கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும்.

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்ற செய்தியை கேள்விப்பத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்பப்பட்டால் அது அவருக்கு கிடைத்ததென்று கருதப்படும். மற்றும் எல்லா முற்பணமும், ஒப்பந்தம் கையொப்பமிட்டவுடன் திருப்பிக் கொடுக்கப்படும். பட்டியலில் குறிப்பிட்ட பிரகாரம் முற்பணத்தை வேறு வேறாகக் கட்ட வேண்டும் என்பதை கேள்விப்பத்திரக்காரர் கவனித்தல் வேண்டும்.

10. ஏற்றுக்கொண்டவுடன் கேள்விப்பத்திரக்காரர்கள், தாங்கள் ஒப்பந்தத்தை சரிவர நடத்தி முடிப்பார்களென பிணை நிற்கக்கூடிய இரண்டு பொறுப்பானவர்களின் பெயர்கள் சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தக்காரர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும்.

11. இது சம்பந்தப்பட்ட எல்லா விபரமும் பட்டோலையில் குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

12. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விப்பத்திரக்காரர் அரசாங்கத்திற்காகவும் அரசாங்கத்தின் சார்பாக கடமைபுரியும் சிறைச்சாலை ஆணையாளரோடு ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும். இப்பதவிப் பெயர் அவ்வப்போது இப்பதவியை வகிக்கும் உத்தியோகத்தரைக் குறிக்கும்.

குறிப்பு.—இதற்கு முன் ஒருமுறையும் இத்திணைக்களத்துடன் ஒப்பந்தம் செய்யாதவர்கள், கேள்விப்பத்திரத்துக்கு மனுச்செய்யும் பொழுது தங்கள் பிரிவுக்காரியாதிகாரியிடம் இருந்து இந்த ஒப்பந்தம் செய்யக்கூடிய தகைமைபற்றி (தங்கள் சொத்துகளின் பெறுமதிபற்றி) அத்தாட்சிப் பத்திரத்துடன் மனுச்செய்தல் வேண்டும்.

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 6 ந் தி.

ஏ. ஏ. டி சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்.

## பட்டோலை

| | நிலையம் | கேள்விப்பத்திர முற்பணம் ரூ. | ச. | பிணைப்பணம் ரூ. | ச. | |
|---|---|---|---|---|---|---|
| 1. | அனுராதபுர சிறைச்சாலையும் நீதிமன்றமும் | 25 | 0 | 100 | 0 | பதில் சிறைச்சாலை அதிகாரி, அனுராதபுரம் |
| | பொலன்னறுவை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 5 | 0 | 25 | 0 | |
| | திருக்கோணமலை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 25 | 0 | 100 | 0 | |
| 2. | மட்டக்களப்பு சிறைச்சாலையும் நீதிமன்றமும் | 25 | 0 | 100 | 0 | உதவி சிறைச்சாலை அதிகாரி, மட்டக்களப்பு |
| | கல்முனை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 25 | 0 | 100 | 0 | |
| 3. | பதுளை சிறைச்சாலை | 10 | 0 | 50 | 0 | உதவி சிறைச்சாலை அதிகாரி, பதுளை |
| | பண்டாரவளை மெஜிஸ்ரேட் நீதிமன்றம் | 5 | 0 | 25 | 0 | |
| | மொனறாகலை | 5 | 0 | 25 | 0 | |
| | நுவரேலியா மறியற்கூடமும் நீதிமன்றமும் | 10 | 0 | 50 | 0 | |
| 4. | கொழும்பு தடுப்புக்காவல் சிறைச்சாலை | 25 | 0 | 150 | 0 | அதிகாரி, கொழும்பு தடுப்புக்காவல் சிறைச்சாலை |
| | புறக்கடை சிறைச்சாலையும் கொழும்பு நீதிமன்றங்களும் | 25 | 0 | 150 | 0 | |
| | ஹொரணை மெஜிஸ்ரேட் நீதிமன்றம் | 5 | 0 | 25 | 0 | |
| | களுத்துறை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 10 | 0 | 50 | 0 | |
| | மெகசின் சிறைச்சாலை | 25 | 0 | 100 | 0 | |
| | மத்துகமை மெஜிஸ்ரேட் நீதிமன்றம் | 5 | 0 | 25 | 0 | |
| | பாணந்துறை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 10 | 0 | 50 | 0 | |
| | வெலிக்கடை சிறைச்சாலை | 25 | 0 | 100 | 0 | |
| 5. | பலப்பிற்றிய மறியற்கூடமும் நீதிமன்றமும் | 10 | 0 | 50 | 0 | சிறைச்சாலை அதிகாரி, காலி |
| | காலி சிறைச்சாலையும் நீதிமன்றமும் | 25 | 0 | 100 | 0 | |
| 6. | சாவகச்சேரி மறியற்கூடமும் நீதிமன்றமும் | 5 | 0 | 25 | 0 | சிறைச்சாலை அதிகாரி, யாழ்ப்பாணம் |
| | யாழ்ப்பாணம் சிறைச்சாலையும் நீதிமன்றமும் | 25 | 0 | 100 | 0 | |
| | ஊர்காவற்றுறை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 5 | 0 | 25 | 0 | |
| | மன்னார் மறியற்கூடமும் நீதிமன்றமும் | 5 | 0 | 25 | 0 | |
| | மல்லாகம் மறியற்கூடமும் நீதிமன்றமும் | 5 | 0 | 25 | 0 | |
| | முல்லைத்தீவு மறியற்கூடமும் நீதிமன்றமும் | 5 | 0 | 25 | 0 | |
| | பரித்தித்துறை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 5 | 0 | 25 | 0 | |
| | வவுனியா மறியற்கூடமும் நீதிமன்றமும் | 5 | 0 | 25 | 0 | |
| 7. | கம்பொலை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 5 | 0 | 25 | 0 | சிறைச்சாலை அதிகாரி, கண்டி |
| | ஹெற்றன் மறியற்கூடமும் நீதிமன்றமும் | 25 | 0 | 150 | 0 | |
| | கேகாலை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 25 | 0 | 100 | 0 | |
| | குருணாகலை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 50 | 0 | 200 | 0 | |
| | மாத்தளை மறியற்கூடமும் நீதிமன்றமும் | 10 | 0 | 50 | 0 | |
| | கண்டி சிறைச்சாலையும் நீதிமன்றமும் | 50 | 0 | 200 | 0 | |
| | மாகோ நீதிமன்றம் | 10 | 0 | 50 | 0 | |
| | டம்புல்ல நீதிமன்றம் | 5 | 0 | 25 | 0 | |
| 8. | கம்பக மறியற்கூடமும் நீதிமன்றமும் | 10 | 0 | 50 | 0 | சிறைச்சாலை அதிகாரி, மஹறை |
| | குளியாபிட்டிய மறியற்கூடமும் நீதிமன்றமும் | 25 | 0 | 150 | 0 | |

| | நிலயம் | கேள்விப்பத்திர முற்பணம் ரூ. | ச. | பிணைப்பணம் ரூ. | ச. | |
|---|---|---|---|---|---|---|
| 9. | ஹம்பந்தோட்டை மறியற்கூடமும் நீதிமன்றமும் .. | 5 | 0 | 25 | 0 | உதவி சிறைச்சாலை அதிகாரி, மாத்தறை |
| | மாத்தறை சிறைச்சாலையும் நீதிமன்றமும் .. | 25 | 0 | 100 | 0 | |
| | தங்கல்லை சிறைச்சாலையும் நீதிமன்றமும் .. | 10 | 0 | 50 | 0 | |
| | திஸ்ஸ மறியற்கூடமும் நீதிமன்றமும் .. | 5 | 0 | 25 | 0 | |
| | வலஸ்முல்லை மறியற்கூடமும் நீதிமன்றமும் .. | 5 | 0 | 25 | 0 | |
| 10. | சிலாபம் மறியற்கூடமும் நீதிமன்றமும் .. | 10 | 0 | 50 | 0 | சிறைச்சாலை அதிகாரி, நீர்கொழும்பு |
| | கஹுவணை மெஜிஸ்ரேட் நீதிமன்றம் .. | 5 | 0 | 25 | 0 | |
| | மாறவிலை மெஜிஸ்ரேட் நீதிமன்றம் .. | 5 | 0 | 25 | 0 | |
| | நீர்கொழும்பு சிறைச்சாலையும் நீதிமன்றமும் .. | 10 | 0 | 50 | 0 | |
| | புத்தளம் மறியற்கூடமும் நீதிமன்றமும் .. | 10 | 0 | 50 | 0 | |
| 11. | அவிஸ்ஸாவெலை மறியற்கூடமும் நீதிமன்றமும் .. | 25 | 0 | 100 | 0 | சிறைச்சாலை அதிகாரி, வெலிக்கடை |
| | பலாங்கொடை மறியற்கூடமும் நீதிமன்றமும் .. | 5 | 0 | 25 | 0 | |
| | இரத்தினபுரி மறியற்கூடமும் நீதிமன்றமும் .. | 25 | 0 | 100 | 0 | |
| | இரக்வனை மறியற்கூடமும் நீதிமன்றமும் .. | 5 | 0 | 25 | 0 | |
| | கொழும்பு தெற்கு நீதிமன்றம் .. | 100 | 0 | 500 | 0 | |
| | கலவானை நீதிமன்றம் .. | 5 | 0 | 25 | 0 | |

–525—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு சீனன் குடாவில் திருகோணமலை துறைமுக அபிவிருத்தி வேலை நிலயத்தில் 1,50,000 செங்கல் வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தவிசாளர் 1973.10.12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

1973.10.12 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100 கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்வி பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1973.10.10 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வழங்கப்படும்.

எஸ். எம். பி. தொலபிஹில்ல,
பதில் கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1, 1973.09.21

9-474—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

## சிறு கைததொழிற்றிணைக்களம்

கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவர் 1973.10.10 ந் திகதி காலை 10 மணி வரை வத்தகமையிலுள்ள மின்தறித் தொகுதிக் கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்கான கேள்விகளை ஏற்றுக்கொள்வார்.

2. ரூபா 6,000 மோ அதற்கு மேற்பட்டவோ செலவாகும் கட்டிட வேலைக்கென ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்திற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கட்குக் கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப் படிவங்களைப் பெறுவதற்கு 1973.10.09 நண்பகல் 12 மணிக்கோ அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திற் கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 50 ஐச் செலுத்திப் பற்றுச் சீட்டையும் பதிவுச் சான்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் 3/1 (1/61)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.09.08.

9-475—22.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78.

---

## சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவர் 1973.10.10 ந் திகதி காலை 10 மணி வரை அம்பிட்டியாவிலுள்ள மின்தறித் தொகுதிக் கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்கான கேள்விகளை ஏற்றுக்கொள்வார்.

2. ரூபா 5,000 மோ அதற்கு மேற்பட்டவோ செலவாகும் கட்டிட வேலைக்கென ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்திற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கட்குக் கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப் படிவங்களைப் பெறுவதற்கு 1973.10.09 நண்பகல் 12 மணிக்கோ அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திற் கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 50 ஐச் செலுத்திப் பற்றுச் சீட்டையும் பதிவுச் சான்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் 3/1—(1/62)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.09.08.

9-476—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

## இலங்கை விமானப் படை

1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1974ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ந் திகதி உட்பட (12 மாதங்கள்) கீழ்க்காணும் பொருட்களை விநியோகம்/சேவை செய்வதற்கு பொறியிட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இக்கேள்விகள் இதன்கீழ் காட்டப்பட்டுள்ள திகதிகளில் முற்பகல் 10.00 மணிவரை கொழும்பு 2, த. பெ. எண். 594, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள இலங்கை விமானப்படைத் தலைமைக் காரியாலயத்திலிருக்கும் கேள்விச்சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | (1) விநியோகம்/சேவை | (2) கேள்விப் படிவங்கள் கொடுக்கப் படும் இறுதி நாள் (கீழ்க்காட்டப் பட்டுள்ள திகதிகளில் ந.ப. 12.00 மணிவரை) | (3) கேள்விதிறக் கப்படும் திகதி (கீழ்க்காட்டப் பட்டுள்ள திகதிகளில் மு.ப. 10.00 மணிவரை) |
|---|---|---|---|
| 1. | கட்டுநாயக்காவிலுள்ள விமானப் படையினர்க்கு மரக்கறி, தேங்காய், பண்ணைப் பிரயோசனங்களை விநியோகித்தல் | 15.10.73 | 16.10.73 |
| 2. | கட்டுநாயக்காவிலுள்ள விமானப் படையினர்க்கு இறைச்சி விநியோகித்தல் | 15.10.73 | 16.10.73 |
| 3. | கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை விமானப் படையினர்க்கு தேசிய காலை உணவுவகைகள் விநியோகித்தல் | 15.10.73 | 16.10.73 |
| 4. | கட்டுநாயக்காவிலுள்ள விமானப் படையினர்க்கு உடன் மீன் விநியோகித்தல் | 15.10.73 | 16.10.73 |
| 5. | கட்டுநாயக்க, சீனன்வாடி, தியத்தலாவை விமானப்படை நிலையங்களிலுள்ள மெத்தைகள் தலையணைகள், இருக்கைகள் புதுக்கியமைத்தல் | 15.10.73 | 16.10.73 |
| 6. | கட்டுநாயக்கா, கொழும்பு, சீனன்வாடி, தியத்தலாவை ஆகிய இடங்களிலுள்ள விமானப்படையினரின் உத்தியோக உடைகள், மெத்தை விரிப்புக்கள், கூடாரங்கள் முதலியன பழுதுபார்த்துத் திருத்தியமைத்தல் | 15.10.73 | 16.10.73 |
| 7. | கட்டுநாயக்க, கொழும்பு, சீனன்வாடி, தியத்தலாவை ஆகிய இடங்களிலுள்ள விமானப் படையினரின் பாதணிகள் பழுதுபார்த்துக் கொடுத்தல் | 16.10.73 | 17.10.73 |
| 8. | கட்டுநாயக்க, கொழும்பு, சீனன்வாடி, தியத்தலாவை ஆகிய இடங்களிலுள்ள விமானப் படையினர்க்கு கட்டிடப் பொருட்கள் விநியோகித்தல் | 16.10.73 | 17.10.73 |
| 9. | கொழும்பு, சீனன்வாடி, தியத்தலாவை ஆகிய இடங்களிலுள்ள விமானப்படையினரின் உத்தியோக உடைகள், பாசறைத் துணிகள் சலவை செய்தல் | 16.10.73 | 17.10.73 |
| 10. | கட்டுநாயக்காவிலுள்ள விமானப்படை ஆஸ்பத்திரியின் மருத்துவத் துணிகளைச் சலவை செய்தல் | 16.10.73 | 17.10.73 |
| 11. | கொழும்பு, கட்டுநாயக்கா விமானப் படைநிலையங்களுக்கு விறகு விநியோகித்தல் | 16.10.73 | 17.10.73 |
| 12. | தியத்தலாவையிலுள்ள விமானப் படையினர்க்கு பாண், தேசிய காலை, உணவுவகைகள் விநியோகித்தல் | 16.10.73 | 17.10.73 |
| 13. | கொழும்பிலுள்ள விமானப் படையினர்க்கு தேசிய காலை, உணவுவகைகள் விநியோகித்தல் | 16.10.73 | 17.10.73 |
| 14. | நிதியகம பகுதியிலுள்ள விமானப் படையினர்க்கு மரக்கறி, தேங்காய், பால் பண்ணைப் பிரயோசனங்கள் விநியோகித்தல் | 17.10.73 | 18.10.73 |
| 15. | நிதியகம பகுதியிலுள்ள விமானப் படையினர்க்கு இறைச்சி விநியோகித்தல் | 17.10.73 | 18.10.73 |
| 16. | நிதியகம பகுதியிலுள்ள விமானப் படையினர்க்கு பாண், தேசிய காலை உணவுவகைகள் விநியோகித்தல் | 17.10.73 | 18.10.73 |
| 17. | நிதியகம பகுதியிலுள்ள விமானப் படையினர்க்கு உடன் மீன் விநியோகித்தல் | 17.10.73 | 18.10.73 |
| 18. | நிதியகம பகுதியிலுள்ள விமானப் படையினரின் உத்தியோக உடைகள், பாசறைத் துணிகள் சலவை செய்தல் | 17.10.73 | 18.10.73 |
| 19. | வீரவில பகுதியிலுள்ள விமானப் படையினர்க்கு மரக்கறி, தேங்காய், பால், பண்ணை பிரயோசனங்களை விநியோயோகித்தல் | 18.10.73 | 19.10.73 |
| 20. | வீரவில பகுதியிலுள்ள விமானப் படையினர்க்கு இறைச்சி விநியோகித்தல் | 18.10.73 | 19.10.73 |
| 21. | வீரவில பகுதியிலுள்ள விமானப் படையினர்க்கு பாண், தேசிய காலை உணவுவகைகள் விநியோகித்தல் | 18.10.73 | 19.10.73 |
| 22. | வீரவில பகுதியிலுள்ள விமானப் படையினர்க்கு உடன் மீன் விநியோகித்தல் | 18.10.73 | 19.10.73 |
| 23. | வீரவில பகுதியிலுள்ள விமானப் படையினரின் உத்தியோக உடைகள், பாசறைத் துணிகள் சலவை செய்தல் | 18.10.73 | 19.10.73 |

2. திருப்பிக்கொடுக்கப்படும் கேள்விக் கட்டுப்பணம் ரூபா 75 - ஐ தனித்தனி ஒவ்வொரு விநியோகம்/சேவைக்கு இத்தலைமை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன அதிகாரியும் கணக்காளருமாகக் கடமையாற்றுபவரிடம் கட்டியபின்னரே கேள்விப்பத்திரங்கள் கொடுக்கப்படும். மேற்கூறப்பட்ட விநியோக/சேவைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 2 ஆம் பகுதியில் குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

3. மேலதிக விபரங்களை கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் காடினர் மாவத்தையிலுள்ள விமானப்படைத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பி. எச். மெண்டிஸ்,
எயர் கொமடோர்,
விமானப் படைத் தளபதி.

9-544—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

## சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச்சபைத் தலைவர் 1973.10.10 ந் திகதி காலை 10 மணி வரை பதுளையிலுள்ள மின்தறித் தொகுதிக் கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்கான கேள்விகளை ஏற்றுக்கொள்வார்.

2. ரூபா 3,000 மோ அதற்கு மேற்படவோ செலவாகும் கட்டிட வேலைக்கென ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்திற் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கட்குக் கேள்விப்படிவங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள், கேள்விப் படிவங்களைப் பெறுவதற்கு 1973.10.09 நண்பகல் 12 மணிக்கோ அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திற் கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 50 ஐச் செலுத்திப் பற்றுச் சீட்டையும் பதிவுச் சான்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1 (1/65)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
கொழும்பு 1,
1973.09.08.

9-480—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

மொரட்டுவை, வெலோறுவிலுள்ள நுணிக்களஞ்சியத்திலிருந்து கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும் எடுத்துச் செல்வதற்குரிய கேள்விகளைக் கொழும்பு, பிரிஸ்டல் வீதியிலுள்ள ஹேமாஸ் கட்டிடத்திலமைந்துள்ள சிறு கைத்தொழிற் றிணைக்களத்தின் கேள்விச் சபைத்தலைவர், 1973.10.16 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

பகுதி பழுதடைந்த மெருகூட்டப்பட்ட சாமான்கள்—ஏறத்தாழ 11,212 உருப்படிகள்

2. கேள்விப்படிவங்களும் கேள்வி நிபந்தனைகளும் கொழும்பு 1, பிரிஸ்டல் வீதியிலமைந்துள்ள ஹேமாஸ் கட்டிடத்திலிருக்கும் சிறு கைத்தொழிற் பணிப்பாளரிடமிருந்து, 1973.10.15 ந் திகதி நண்பகல் 12 மணிக்கோ அதன் முன்போ, திரும்பப் பெறக்கூடிய கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 2,500/- செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

3. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து சிறு கைத்தொழிற் றிணைக்களத்திற்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1(5/47)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.09.08.

9-479—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

குருநாகலிலுள்ள பசைபூட்டும் பொறித் தொகுதியில் தேக்கி வைக்கும் தொட்டியொன்றை அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச்சபைத் தலைவரால் 1973.10.13 ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்தில் கட்டிட வேலைக்கென ரூபா 15,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட வேலைகட்கெனத் தம்மைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புவோர் ரூபா 100 ஐ வைப்புப் பணமாக இந்தத் திணைக்களத்திற் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அத்துடன் பதிவேட்டையும் காண்பித்து 1973.10.12 ந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழிற்றிணைக்களம்.

தொடர் இல.: 3/1 (1/64)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.09.08.

9-478—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

பசைபூட்டும் மின்தறி வேலைக்களத்திற்கு தண்ணீர் வழங்குவதற்கு மாற்றங்கள் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் சிறுகைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத்தலைவரால் 1973.10.13 ந் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ஏதாவதொரு அரசாங்கத் திணைக்களத்தில் கட்டிட வேலைக்கென ரூபா 6,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையைக் கொண்ட வேலைகட்கெனத் தம்மைப் பதிவு செய்தவர்களுக்கே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புவோர் ரூபா 50 ஐ வைப்புப் பணமாக இந்தத் திணைக்களத்திற் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டையும் அதுடன் பதிவேட்டையும் காண்பித்து 1973.10.12 ந் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதீர,
பணிப்பாளர்,
சிறு கைத்தொழிற்றிணைக்களம்.

தொடர் இல : 3/1—(1/63)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.09.08.

9-477—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

---

## பொருட்கள் விற்பனையும் பிறவும்

### பழைய பொருட்கள் விற்பனை

#### பொலிஸ் இலாகா

உபயோகிக்க முடியாத பொருட்கள் 1973 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29 ந் திகதி காலை 9.30 மணிக்கு அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஏலத்தில் விற்கப்படும். பணம் உடனே கொடுத்து பொருட்களை உடனே எடுக்க வேண்டும்.

பொருட்களின் விபரம்

| | |
|---|---|
| பழைய தும்பு மெத்தைகள் ... | 17 |
| நுளம்பு வலை ... | 1 |
| குறுந்டிக் வானொலி பெட்டி (இல. 10613002381) ... | 1 |
| டெலிபங் வானொலி பெட்டி இல. 107484 ... | 1 |
| துவி சக்கர வண்டி சீற் ... | 1 |
| துவி சக்கர வண்டி பெல் ... | 1 |
| கரம் போட் ... | 1 |
| டயினமோ ... | 1 |
| பிலாஸ் லைட் ... | 1 |
| துவி சக்கர வண்டி (றலி) இல. DN 70274 ... | 1 |
| துவி சக்கர வண்டி (மொறோரா) இல. AB 107 ... | 1 |
| துவி சக்கர வண்டி (றலி) இல. CQ 2203 ... | 1 |
| ரேட் மாஸ்டர் துவிசக்கர வண்டி இல. HC 6626 ... | 1 |
| ரேட் மாஸ்டர் துவிச்சக்கரவண்டி இல. RM 8914 ... | 1 |

G. B. கொட்டகதெனிய,
உப பொலிஸ் அதிகாரி,
அநுராதபுரம்.

6.9.73.

9-506—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

## பொருட்களின் விற்பனை

மீண்டகடித அலுவலகத்தில் உரிமை கோரப்படாத அஞ்சல் பக்கெட்டுக்களில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்கள் 1973 ஒற்றோபர் 10 ம் திகதி புதன்கிழமை மு. ப. 9.30 மணிக்கு கொழும்பு, விஜயவர்த்தன மாவத்தை, மத்திய தபால் பரிமாற்று நிலையத்தில் உள்ள மீண்டகடித அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். நியாயமான விலை கோரப்படாத எந்த விடயமும் விற்பனையிலிருந்து நிறுத்தி வைக்கப்படும். வெற்றிகரமான உச்சவிலை கோரியவர் பணமாக பெறுமதியை உடனடியாகச் செலுத்தி அதே நாளில் பொருட்களை அகற்றுதல் வேண்டும்.

எச். டபிள்யூ. ஜே. பெரேரா,
அஞ்சல் அதிபதி,
தொலைத்தொடர்புப் பணிப்பாளருக்காக.

அஞ்சல் பிரிவு,
அ. தொ. தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 08 ந உ.

| தொடர் எண் | | பொருட்களின் விவரம் |
|---|---|---|
| 1 | .. | ஓர் அந்தர் பழைய புதினத்தாள் |
| 2 | .. | ஓர் அந்தர் பழைய புதினத் தாள் |
| 3 | .. | 40 இருத்தல் நிறையுள்ள பாவனைக்குதவாத புதினத்தாள்களைக் கொண்ட 50 பைகள் |
| 4 | .. | ஒரு கட்டு 100 ஆங்கில சஞ்சிகைகள் |
| 5 | .. | ஷை |
| 6 | .. | ஷை |
| 7 | .. | ஷை |
| 8 | .. | ஷை |
| 9 | .. | ஷை |
| 10 | .. | ஷை |
| 11 | .. | ஷை |
| 12 | .. | ஒரு கட்டு 100 வெளிநாட்டு சஞ்சிகைகள் |
| 13 | .. | ஒரு கட்டு 100 தமிழ் சஞ்சிகைகள் |
| 14 | .. | ஒரு கட்டு 100 சீனச் சஞ்சிகைகள் (ஆங்கிலம்) |
| 15 | .. | ஒரு கட்டு 50 வைத்திய வெளியீடுகள் (ஆங்கிலம்) |
| 16 | .. | ஒரு கட்டு 50 இயந்திரவியல் சஞ்சிகைகள் (ஆங்கிலம்) |
| 17 | .. | ஒரு கட்டு 100 சீன குழந்தைகளுக்கான படப்புத்தகம் (ஆங்கிலம்) |
| 18 | .. | பாவனை செய்யப்பட்ட 20,000 அஞ்சல் முத்திரைகள் |
| 19 | .. | ஷை |
| 20 | .. | ஷை |
| 21 | .. | அறுபது 1973 கலண்டர்கள் |
| 22 | .. | ஷை |
| 23 | .. | பத்து 1973 கலண்டர்கள் |
| 24 | .. | ஷை |
| 25 | .. | பதினைந்து 1973 கலண்டர்கள் |
| 26 | .. | 25 றீடேஸ் டைஜெஸ்ற் (பிந்திய பிரதிகள்) |
| 27 | .. | 25 றீடேஸ் டைஜெஸ்ற் (பிந்திய பிரதிகள்) |
| 28 | .. | 25 றீடேஸ் டைஜெஸ்ற் (பிந்திய பிரதிகள்) |
| 29 | .. | இருநூறு சீன பிளாஸ்றிக் ஒலித்தட்டுகள் |
| 30 | .. | ஷை |
| 31 | .. | ஷை |
| 32 | .. | ஷை |
| 33 | .. | நூற்றைம்பது சீன பிளாஸ்றிக் ஒலித்தட்டுகளும் 8 கோப்பு உறைகளும் |
| 34 | .. | 7 தேசிய புவியியல் சஞ்சிகைகள் |
| 35 | .. | " லு சுண் " இனது தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள் (4 ஆங்கிலப் புத்தகம்) |
| 36 | .. | 40 சீன படத் தபால் அட்டைப் பைக்கெற்றுக்கள் |
| 37 | .. | 3 வர்ணப் புத்தகம்—3 ஆங்கிலப் புத்தகம்—இரண்டு சமயப் புத்தகம் |
| 38 | .. | இரண்டு புதிய சேட்டுகள் (வெள்ளை) |
| 39 | .. | இரண்டு சேட்டுகள் (பாவனைசெய்யப்பட்ட) |
| 40 | .. | ஒரு சில்க்ஸ் சேலை (5 யார்) |
| 41 | .. | ஒரு பாவாடை 5 மாதிரித்துணி |
| 42 | .. | ஒரு ஒலித்தட்டு |
| 43 | .. | இரு நாகங்கள்—வெங்கலத்தில் செய்யப்பட்டவை |
| 44 | .. | இரண்டு பொம்மைகள் (ஒன்று பழுதடைந்தது) ஒரு 1973 தின ஏடு, ஒரு பல் உலக்கி, ஒரு பேனை மின்விளக்கு (பழுதடைந்தது), ஒரு கசெற் ரேப் (பாவனை செய்யப்பட்டது), ஒரு மோதிரம் (வெள்ளி முலாம் பூசப்பட்டது), இரு காதணிகள் (பழுதடைந்தது) |
| 45 | .. | ஒரு விஞேயிங் விசிறி—இரு பிறைங் பான்ஸ் |
| 46 | .. | மூன்று ருத்தல் பீடி இலைகள் |

(ஜியூ 667)

9–545—21.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 78

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தலகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் .. | 7.9.73 | வெள்ளி .. | 29.8.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி .. | 5.9.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி .. | 11.9.73 | செவ்வாய் . | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி .. | 19.9.73 | புதன் .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வெ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது